සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE

| මගේ අංකය<br>எனது இல<br>My No | ඔබේ අංකය<br>உமது இல: ..........................................<br>Your No | දිනය<br>திகதி : 2018.03.05<br>Date |
|---|---|---|

2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சமுர்த்திச் சட்டத்தின் 33(9) பந்தியின் பிரகாரம் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமைத்துவ சபையின் அனுமதிக்கமைய வெளியிடப்படும் விதிமுறைகள் : 2018/03 இற்கான முதலாவது பிற்சேர்க்கை

**"எமது பாரம்பரியத்தை பேணுவோம் - சிக்கனத்துக்கு வழிகோருவோம்"**

**சிங்கள/தமிழ் புத்தாண்டு விழாவிற்கு இணைவாக சேமிப்பு மேம்பாடு மற்றும் புத்தாண்டு விழா வேலைத்திட்டம் - 2018**

01. சிங்கள/தமிழ் புத்தாண்டு விழாவுடன் இணைந்த விதத்தில் 2018 ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரையான காலத்தினுள் செயற்படுத்த உத்தேசித்துள்ள சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்திற்கு வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள் எமது வங்கிகள் மற்றும் கள உத்தியோகத்தர்களின் கோரிக்கைகளுக்கமைய கீழ்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது.

02. 2018 இலக்கம் 03 ஒழுங்கு விதியில் பந்தி 3.5 இன் கீழ் வழங்கப்பட்டுள்ளவைப்புத் தொகைக்கான இலக்கில் குழுவைப்புக் கணக்குகளும் உள்ளடக்கப்படுவதற்கு இடமளிக்கப்படுகிறது.

03. சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் சேகரிக்கும் வைப்புகளுக்கு நினைவுப் பரிசுகள் வழங்குதல் கீழ்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

3.1 ரூபா.1,000/= தொடக்கம்–2,499/= வரையான தொகையினை வைப்புச் செய்யும் வைப்பாளர்களுக்கு (சிறுவர் கணக்கு உட்பட) ரூபா.50.00 பெறுமதியான பொருத்தமான பரிசுப்பொருள் மாவட்ட கேள்வி கோரல் நடைமுறையின் கீழ் (பொருத்தமான நிறுவனத்திலிருந்து) வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 குழுச் சேமிப்புக் கணக்குகளுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் பரிசுப் பொருட்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பரிசுப் பொருளுக்கு பதிலாக குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கக்கூடிய பரிசுப் பொருட்களை அவர்கள் கோரும் பட்சத்தில் உரிய வைப்புத் தொகைக்கு செலவிடக் கூடிய உயர்ந்த பட்ச தொகைக்கு சமமான அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வேறு பரிசுப் பொருட்களை வழங்க முடியும். ஆனால் எந்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொருவருக்கும் செலவிடப்படும் மொத்த தொகை உயர்ந்தபட்ச தொகையினை மிஞ்சக் கூடாது.

**உதாரணமாக:-** ரூபா.15,000/= - ரூபா.29,999/= வரையான தொகைக்கு குழு வைப்பு பெறப்படும் சந்தர்ப்பத்தில் ரூபா.750/= இற்கான பரிசு உரித்தாகும். இக் குழுவைப்பின் இத்தொகைக்கு ஒரு பரிசுப் பொருளை அல்லது ரூபா.125/= பெறுமதியான 05 பரிசுப் பொருட்கள் வழங்க முடியும். ஆனால் வழங்கப்படும் பரிசுப் பொருட்கள் சுற்றுநிருப ஆலோசனைகளில் குறிப்பிட்டுள்ள பரிசுப் பொருளாக இருத்தல் வேண்டும்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4th floor, Sethsiripaya ,Battaramulla

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General
Tel- 011-2873802/2872202
Fax - 011-2889002
E-mail-dg@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (මානව සම්පත්) / பணிப்பாளர் ( மனிதவளம்) / Director (Human Resource)
011-2873799
011-2873996
diradmin@divineguma.gov.lk
Hot Line : 0112-889007

ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant
011-2869742
011-2869742
finance@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance)
011-2889003
011-2887469
Hot Line:0112-885582

කාර්යාලය / அலுவலகம் / Office
011-2887280
Hot Line: 011- 2887722

4. சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் அங்கத்தவர்/ திரியமாதா/ அங்கத்தவர் அல்லாதோர் ஆகிய வைப்புக் கணக்குகளின் பொருட்டு சேகரிக்கும் வைப்புத் தொகைகளுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டிருக்கும் போது பின்னர் யாராவது சுயசக்தி கடனை கோரும் சந்தர்ப்பத்தில் சேமிப்பு மேம்பாட்ட வேலைத்திட்டத்தின் கீழ் சேகரித்த வைப்புத் தொகையின் பொருட்டு சுயசக்தி கடன் வழங்க முடியாது என்பதையும் தெரியப்படுத்துகின்றேன்.

5. பரிசுப் பொருளாக குடைகளை தெரிவு செய்யும் போது பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள்

| குடையின் வகை | விசாலம் | துணியின் வகை | துணியின் வகையும் நிறமும் | **சமுர்த்தி வங்கி** என அச்சிடல் |
|---|---|---|---|---|
| பெண்களுக்கானது (இரண்டாக மடிக்கக் கூடியது) (Two Fold) | நடுத்தரம் | Normal Polyester | Golden Yellow & Maroon | Golden Yellow நிறத்திலான பகுதியில் இரு இடத்தில் சமுர்த்தி வங்கி என கறுப்பு நிறத்தில் அச்சிடல் ஒவ்வொரு எழுத்தும் 2.5 செ.மீ ஆகும் |
| பெரியது (ஆண்களுக்கு) | நடுத்தரம் | Normal Polyester | Golden Yellow & Maroon | Golden Yellow நிறத்திலான பகுதியில் நான்கு இடத்தில் சமுர்த்தி வங்கி என கறுப்பு நிறத்தில் அச்சிடல் ஒவ்வொரு எழுத்தும் 4.0 செ.மீ ஆகும். |

6. மாவட்ட சமுர்த்தி பிரிவு உரிய முறைப்படி கேள்வி நடைமுறைகளை பின்பற்றுவதுடன்தெரிவு செய்யப்படும் நிறுவனத்திற்கு கோரிக்கையுடன் கீழ்வரும் தகவல்களையும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
    1. சமுர்த்தி வங்கியின் பெயர்
    2. வங்கியின் முகவரி
    3. தொலைபேசி இலக்கம்
    4. தேவையான பரிசுப் பொருளும் மற்றும் எண்ணிக்கையும்

7. சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்திற்கென கொள்வனவு செய்யப்பட்ட பரிசுப் பொருட்களில் ஏதும் மீதிகள் காணப்படின் அவற்றை இதன் பின்னரான சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்திற்கு அல்லது பொருத்தமான நிகழ்வுக்கு பயன்படுத்த இடமளிக்கப்படுகின்றது. இருப்பினும் முடியுமானவரை தேவைக்கேற்றளவு மாத்திரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பது மிகப் பொருத்தமானதாக அமையும்.

8. 2018 ஏப்ரல் 16 ஆம் திகதி சமுர்த்தி வங்கிக்கு வருகைதரும் வாடிக்கையாளர்கள், கட்டுபாட்டுச் சபை உறுப்பினர்கள், மற்றும் உத்தியோகத்தர்களை அன்புடன் வரவேற்று உபசாரங்களை மேற்கொள்ள முடியும் இவற்றிற்கு வங்கி நிதியில் இருந்து உயர்ந்தபட்சம் ரூபா.5,000/=வுக்கு உட்பட்ட தொகைக்கு உபசாரச் செலவுகளை மேற்கொள்ள இடமளிக்கப்படுகின்றது.

கலாநிதி. சுனில் ஜயந்த நவரத்ன,
சமுர்த்தி வங்கி முகாமைத்துவ சபைத் தலைவர்/பணிப்பாளர் நாயகம்,

Translated By:- I Aliyar